தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 44/பேரூ/2023
நாள் 13.04.2023

திரு.C.P.சுஜி,
அருமனை
கன்னியாகுமரி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்.

செயல் அலுவலர்,
அருமனை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம். – எதிர் மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், பனங்கரை, அருமனை, பள்ளிவிளை, கதவு எண்.16/165A என்ற முகவரியில் வசிக்கும் திரு.C.P.சுஜி என்பவரின் 15.01.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 01.02.2023 அன்று பெறப்பட்டு 44/பேரூ/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கன்னியாகுமரி மாவட்டம், பனங்கரை, அருமனை, பள்ளிவிளை, கதவு எண்.16/165A என்ற முகவரியில் வசிக்கும் திரு.C.P.சுஜி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"அருமனை பேரூராட்சியில் கடந்த 2006–2016 வரை தொடர்ந்து பத்தாண்டுகள் பேரூராட்சி தலைவராக பணியாற்றியுள்ளேன். இந்த பேரூராட்சியில் 2020–2021 ஆம் ஆண்டு (பொறுப்பு) செயல் அலுவலராக பணியாற்றிய திரு.எட்வின் ஜோஸ் சுமார் ரூ 1 கோடி மதிப்பில் பொதுநிதியில் இருந்து வளர்ச்சி பணிகள் தேர்வு செய்துள்ளார். மேற்படி பணிகளை நடைமுறைபடுத்த டெண்டர் விட்டதில் முறையாக பதிவு தபாலில் அனைத்து ஒப்பந்தகாரர்களுக்கும் கடிதம் அனுப்பாமல் தனக்கு 10% லஞ்சம் தரக்கூடிய ஒருசில ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும் முறைகேடாக பணியினை நேரடியாக வழங்கியுள்ளார். இதனால் பேரூராட்சிக்கும், அரசுக்கும் பல இலட்சம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. மேலும் பேரூராட்சியின் ஒப்பந்தப் பணியினை நம்பி இருக்கின்ற மற்ற ஏழை ஒப்பந்தக்காரர்கள் வேலை கிடைக்காத

சூழல் ஏற்பட்டு வறுமையிலும் மன உளைச்சலுக்கும் ஆளாக்கப்பட்டார்கள். இந்த முறைகேடு சம்பந்தமாக 09.11.2020 அன்று மாவட்ட ஆட்சியர் நாகர்கோவில், பேரூராட்சி உதவி இயக்குநர், நாகர்கோவில், பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை ஆகிய அதிகாரிகளுக்கு பதிவுத்தபால் மூலம் புகார் அனுப்பியும் முறையான எந்த விசாரணையும் நடைபெறவில்லை.

மேலும் செயல் அலுவலரை காப்பாற்ற வேண்டும் என்ற நோக்குடன் அதே பேரூராட்சி துறையில் பணிபுரியும் செயல் அலுவலரை விசாரணை அதிகாரியாக நியமித்து இந்த முறைகேட்டினை மூடிமறைக்க பார்கிறார்கள். ஆகையால் என்னுடைய புகாருக்கு எந்த நீதியும் கிடைக்கவில்லை. எனவே, விசாரணை அதிகாரியை மாற்றி தாங்கள் கோப்புகளை முழுமையாக நேரடி ஆய்வு செய்து லஞ்சம் பெற்றுக் கொண்டு செயல்பட்ட பேரூராட்சி செயல் அலுவலர் மீது தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு மிகவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 25.02.2023 நாளிட்ட கடிதம் மூலம் அருமனை முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

அருமனை முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 09.03.2023 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:–

அருமனை பேரூராட்சியில் தனி அலுவலரின் தீர்மானம் எண்.282, நாள் 30.08.2019–ன்படி அருமனை முதல்நிலை பேரூராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களின் அவசியம் கருதி, அவர்களின் கோரிக்கைகளின்படி பழுதடைந்த சாலைகள் சரி செய்ய பணிகள் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு உதவி செயற்பொறியாளரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தனி அலுவலரின் 25.09.2019 நாளிட்ட தீர்மானத்தின்படி அங்கீகரிக்கப்பட்டது. மேற்படி பணிகளை பேரூராட்சியின் பொது நிதி 2019–2020–ன் கீழ் மேற்கொள்ள பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 13.12.2019 நாளிடப்பட்ட நடவடிக்கைகள் ஆணையின் மூலம் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | குளவிக்குளம் மணலி சாலை மேம்பாடு செய்தல். | 18.00 |
| 2 | மானசேகரம் முதல் திற்பரப்பு செல்லும் சாலை மேம்பாடு செய்தல் | 20.00 |
| 3 | நெடியசாலை முதல் அரசு மருத்துவமனை வழியாக ஆலறவிளை செல்லும் சாலை மேம்பாடு செய்தல் | 20.00 |
| 4 | முரம்புவிளை மணலி சாலை மேம்பாடு செய்தல் | 8.00 |
| 5 | தேங்காபாறவிளை குஞ்சாலுவிளை சாலை மேம்பாடு செய்தல் | 15.00 |
| 6 | மணலி முதல் மானசேகரம் செல்லும் சாலை வரை வடிகால் அமைத்தல் | 20.00 |

மேற்படி பணிகளை மேற்கொள்ள அருமனை பேரூராட்சியில் பதிவு பெற்றுள்ள 13 ஒப்பந்ததாரர்களுக்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு சாதாரண தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் செய்தி மக்கள் தொடர்பு துறை மூலம், செயல்முறைகள் ஆணை எண்.237 நாள் 14.12.2019–ன்படி பத்திரிக்கை மற்றும் இணையதளத்தில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்கண்ட 6 பணிகளையும் மேற்கொள்ள 12 ஒப்பந்ததாரர்கள் விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளனர். குறைந்த விலைப்புள்ளிகள் 06.02.2020 அன்று தீர்மானம் மூலம் தனி அலுவலரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து செயல் அலுவலர் உத்தரவின்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள 23.02.2020 அன்று பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. நாகர்கோவில் உதவி செயற்பொறியாளரால் தயாரிக்கப்பட்ட பணி முடிவறிக்கை மற்றும் பயனீட்டு சான்றுகள் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களுக்கு தொகைகள், குறுக்கிடப்பட்ட காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளது. இதில் முறைகேடுகள் ஏதும் இல்லை.

கன்னியாகுமரி மாவட்டம் அருமனை பேரூராட்சியில் 30.08.2019 அன்றைய தனி அலுவலரின் தீர்மானத்தின்படி அருமனை பேரூராட்சி பகுதியில் உள்ள பொதுமக்களின் அவசியம் கருதி அவர்களின் கோரிக்கைகளின்படி பழுதடைந்த சாலைகள் சரி செய்ய பணிகள் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி தேர்வு செய்யப்பட்ட பணிகளுக்கு உதவி செயற் பொறியாளரால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு, தனி அலுவலரின் 25.09.2019 அன்றைய தீர்மானத்தின்படி அங்கீகரிக்கப்பட்டது. மேற்படி பணிகளை பேரூராட்சியின் பொது நிதி 2020–2021–ன் கீழ் மேற்கொள்ள நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 27.01.2020 நாளிடப்பட்ட நடவடிக்கைகள் ஆணை மூலம் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இரும்பிலி–மூத்தான்குளம் சாலை மேம்பாடு செய்து அலங்கார கற்கள் பதித்தல். | 16.00 |
| 2 | பனங்கரை மேலவிளை சாலை மேம்பாடு செய்து அலங்கார கற்கள் பதித்தல். | 15.00 |
| 3 | படப்பச்சை (ஒய்.எம்.சி.எ) பாலம் அருகிலிருந்து காப்பித்தோட்டம் சாலை மேம்பாடு செய்து அலங்கார கற்கள் பதித்தல். | 15.00 |
| 4 | ஐந்திக்கோணம் திரு.ஸ்ரீகுமார் வீடு முதல் திரு.டேவிட் வீடு வரை சாலை மேம்பாடு செய்து சிமெண்ட் தளம் அமைத்தல். | 10.00 |
| 5 | ஐந்திக்கோணம் திரு.ராஜமணி வீடு முதல் ஈச்சேரி குளம் வரை சாலை மேம்பாடு செய்து சிமெண்ட் தளம் அமைத்தல். | 8.00 |

மேற்படி பணிகளை மேற்கொள்ள அருமனை பேரூராட்சியில் பதிவு பெற்றுள்ள 13 ஒப்பந்ததாரர்களுக்கு அஞ்சல்வில்லையுடன் 07.07.2020 நாளிடப்பட்ட கடிதம் மூலம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும் செய்தி மக்கள் தொடர்பு துறை செயல்முறைகள் ஆணை எண்.420 நாள் 07.07.2020–ன்படி பத்திரிக்கை மற்றும் இணையதளத்தில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து மேற்கண்ட 5 பணிகளையும் மேற்கொள்ள 10 ஒப்பந்ததாரர்கள் விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ளனர். குறைந்த விலைப்புள்ளிகள் 27.08.2020 அன்று தீர்மானம் மூலம் தனி அலுவலரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து 27.08.2020 நாளிட்ட செயல் அலுவலர் உத்தரவின்படி மேற்படி பணிகளை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கப்பட்டு, பணிகள் செய்து முடிக்கப்பட்டுள்ளது. உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளரால் தயாரிக்கப்பட்ட பணி முடிவறிக்கை, பயனீட்டு சான்றுகள் மற்றும் தரச்சான்றுகள் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களுக்கு தொகைகள் குறுக்கிடப்பட்ட காசோலை மூலம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இச்சாலைப் பணிகள் அனைத்தும் தற்போது பொதுமக்கள் மற்றும் பொது போக்குவரத்து பயன்பாட்டில் உள்ளது. இதில் முறைகேடுகள் ஏதும் இல்லை என்ற விவரம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும் மற்றும் எதிர்மனுதாரரான அருமனை பேரூராட்சி செயல் அலுவலரும், 09.03.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 25.02.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு. C.P.சுஜி என்பவர் 09.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

''கன்னியாகுமரி மாவட்டம் அருமனை பேரூராட்சியில் கடந்த 2006 முதல் 2016 வரை அருமனை பேரூராட்சி நகர்மன்றத் தலைவராக பணியாற்றியுள்ளேன். மேற்கண்ட பேரூராட்சியில் கடந்த 2020–21 ஆம் ஆண்டில் வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ள 1 கோடி ரூபாய் மதிப்புள்ள ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்து, ஒப்பந்ததாரர்களுக்கு முறைப்படி பதிவுத் தபாலில் (Registered post) கடிதம் அனுப்பாமல் சாதாரண தபாலிலேயே ( Ordinary Post) பேரூராட்சியினர் கடிதம் அனுப்பி, குறிப்பிட்ட ஒருசில ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை முறைகேடாக ஏற்று, பணிகளை வழங்கியுள்ளனர். இம்முறைகேடு குறித்து மாவட்ட ஆட்சியருக்கும், பேரூராட்சிகளின் இயக்குநருக்கும் புகார்கள் அனுப்பியும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை அருமனை பேரூராட்சி செயல் அலுவலரை காப்பாற்றும் நோக்கில் வேறொரு செயல் அலுவலரை விசாரணை அலுவலராக நியமித்து என்னை கடந்த 12.3.2022 அன்று விசாரணைக்கு அழைத்து, மேற்கண்ட தேதியில் நடைபெற்ற விசாரணையில் நான் கலந்துகொண்டேன் என்பதையும், அவ்விசாரணையின் முடிவில் தவறு செய்த பேரூராட்சி அலுவலர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்து, இந்நேர்வு தொடர்பான கோப்புகளை சரிபார்த்து, தவறு செய்த செயல் அலுவலர் மீது தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரான அருமனை பேரூராட்சி செயல் அலுவலர் திரு.N.ஜாண்சன் என்பவர் 09.03.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கன்னியாகுமரி மாவட்டம் அருமனை பேரூராட்சியில் பழுதடைந்த சாலைகளை சரிசெய்யும் பணிகளை அருமனை பேரூராட்சியின் பொது நிதி 2019–2020ன் கீழ் மேற்கொள்ள, பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் ந.க.எண் 9802/2019/பா, நாள் 13.12.2019 –ன்படி 6 சாலைகளின் மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அப்பணிகளை மேற்கொள்வது தொடர்பான ஒப்பந்தப் புள்ளிகளைக் கோரும்போது 15.12.2019 அன்று ஒரு தமிழ் பத்திரிகையில் பத்திரிகை விளம்பரமும், இணையதளத்தின் வழியாகவும் ஒப்பந்தப்புள்ளிகளுக்கான விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டது. இம்முறை மன்றம் பிரிதொரு வாய்ப்பு வழங்கும்போது அவற்றின் உண்மை நகல்களையும், இந்நேர்வு தொடர்பான அசல் கோப்புகளையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேலும் மேற்கண்ட ஒப்பந்தப் பணிகளை மேற்கொள்ளும்பொருட்டு பேரூராட்சியின் பதிவுபெற்ற 13 ஒப்பந்ததாரர்களுக்கு அஞ்சல் வில்லையுடன் கூடிய தபால் அனுப்பப்பட்டது என்றும், பதிவுத் தபாலில் (Registered post) அனுப்பப்படவில்லை என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட பணிகள் குறித்து உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் தணிக்கை செய்யப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக இம்முறை மன்றத்தில் அளிக்கப்படும் எனது 9.3.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மேற்கண்ட வாக்குமூலத்தில் இம்முறைமன்ற நடுவம் பிரிதொரு சந்தர்ப்பம் வழங்கினால் மனுதாரர் தெரிவித்துள்ள புகார் தொடர்பான பேரூராட்சியின் அசல் கோப்புகளை இம்முறைமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என செயல் அலுவலர் கேட்டுக் கொண்டதின் பொருட்டு மீண்டும் 29.03.2023 அன்று இம்முறைமன்ற நடுவத்தின் விசாரணையில் கலந்து கொள்ளுமாறு செயல் அலுவலருக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது.

(6) எதிர்மனுதாரரான அருமனை பேரூராட்சி செயல் அலுவலர் உடல் நலக்குறைவின் காரணமாக 29.03.2023 அன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை. அவர் சார்பாக இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.ஈ.ரமேஷ் மற்றும் வரி வசூலராகப் பணியாற்றும் திரு.சி.இமயவரம்பன் ஆகியோர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

"கன்னியாகுமரி மாவட்டம் அருமனை பேரூராட்சியில் பழுதடைந்த சாலைகளை பழுதுபார்க்கும் பணிகளுக்காக பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் ரூபாய் 1.2 கோடி மதிப்பீட்டில் 6 பணிகளை மேற்கொள்ளவும், மேலும் ரூபாய் 64 லட்சம் மதிப்பீட்டில் 5 பணிகளை மேற்கொள்ளவும் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஒப்பந்தப்புள்ளிகள் முறையாக பேரூராட்சியின் தகவல் பலகையில் இடம் பெறச் செய்தும், செய்தி மக்கள் தொடர்புத் துறை மூலம் ஜூனியர் குரல் என்கின்ற பத்திரிகை மற்றும் இணையத்தில் விளம்பரம் செய்யப்பட்டன. மேலும் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு சாதாரண அஞ்சல் மூலம் தகவல் அனுப்பப்பட்டது. மேற்கண்ட 6 பணிகள் மற்றும் 5 பணிகளுக்கு

மொத்தம் 26 ஒப்பந்ததாரர்களுக்கு ( 13 + 13 ) மேற்கண்ட அஞ்சல் அனுப்பப்பட்டது. ஒவ்வொரு பணிக்கும் 2 ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டன. இதில் குறைந்தளவு விலைப் புள்ளியை அளித்த ஒப்பந்ததாரருக்கு ஆணைகள் வழங்கப்பட்டு பணிகள் செய்து முடிக்கப்பட்டு தற்போது மேற்கண்ட சாலைகள் பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்துவருகிறது என்கின்ற விவரத்தையும், மேற்கண்ட பணிகள் குறித்து உள்ளாட்சி தணிக்கையும் செய்து முடிக்கப்பட்டு, அதில் எவ்வித ஆட்சேபனையும் உள்ளாட்சி தணிக்கைத் துறையினரால் தெரிவிக்கப்படவில்லை என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் எங்களால் இம்முறை மன்றத்தில் அளிக்கப்படும் அருமனை பேரூராட்சியின் செயல் அலுவலரின் 29.3.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது கூடுதல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்'' என தெரிவித்துள்ளார்கள்.

(7) அருமனை பேரூராட்சி செயல் அலுவலர் மனுதாரரின் புகார் குறித்து தனது 09.03.2023 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ள விளக்கத்தினையே மீண்டும் 29.03.2023 நாளிட்ட கடிதத்திலும் தெரிவித்துள்ளார்.

(8) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், அருமனை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் மற்றும் அருமனை பேரூராட்சியின் இளநிலை உதவியாளர் மற்றும் வரி வசூலர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

2014 ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்சட்டம் (ம) விதிகளில் இம்முறைமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையிலும், குறிப்பாக:–

பிரிவு "7" The Ombudsman shall perform all or any of the following functions namely:-

7 (c) where the irregularity is due to willful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules அடிப்படையிலும், இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், அருமனையைச் சேர்ந்த மனுதாரர் திரு.C.P.சுஜி என்பவர் தனது 15.01.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில், அருமனை பேரூராட்சியில் 2020–2021 ஆம் ஆண்டில் வளர்ச்சி பணிகள் மேற்கொள்வதற்கான ரூ 1/– கோடி மதிப்பீட்டிலான பணிகளுக்கு பேரூராட்சி செயல் அலுவலர் பொது நிதியில் நடவடிக்கை மேற்கொண்டு, ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பதிவுத் தபாலில் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் அனுப்பாமல் குறிப்பிட்ட சில ஒப்பந்ததாரர்களுக்கு மட்டும் அனுப்பி முறைகேடாக பணியினை நேரடியாக வழங்கியுள்ளார் என புகாராகத் தெரிவித்துள்ளார்.

கன்னியாகுமரி மாவட்டம், அருமனை முதல்நிலை பேரூராட்சியில் பொதுமக்களின் நலன் கருதி, பேரூராட்சி செயல் அலுவலரால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் 2019–2020 ஆம் ஆண்டில் அருமனை பேரூராட்சிக்குட்பட்ட 6 சாலைகளை மேம்பாடு

செய்வதற்கு மொத்தம் ரூ 101/– இலட்சம் மதிப்பீட்டில் பேரூராட்சியின் பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வதற்கு நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் 13.12.2019 நாளிடப்பட்ட நடவடிக்கை ஆணையில் நிர்வாக அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், 2019–20 ஆம் ஆண்டு பொதுநிதியின் கீழ் 5 சாலைகளை மேம்படுத்திட மொத்தம் ரூ.64/– இலட்சம் மதிப்பீட்டில் பணிகளை மேற்கொள்ள நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவிஇயக்குநரின் 27.01.2020 நாளிடப்பட்ட நடவடிக்கை ஆணையில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஆக மொத்தம் ரூ.165/– இலட்சம் மதிப்பீட்டில் 11 பணிகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் 11 பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை பேரூராட்சியின் நாளிதழ், இணையதளம் ஆகியவற்றில் வெளியிட்டுள்ளதையும் மற்றும் பேரூராட்சியில் பதிவு செய்துள்ள மொத்தம் 13 ஒப்பந்ததாரர்களுக்கு சாதாரண தபாலில் தகவல் அனுப்பப்பட்டுள்ளதையும் ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

மேற்காணும் 11 பணிகளை மேற்கொள்ள ஒவ்வொரு பணிக்கும் 2 ஒப்பந்ததாரர்களிடமிருந்து மட்டுமே ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, இதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கோரிய ஒப்பந்ததாரருக்கு பணியினை மேற்கொள்ள ஆணைகள் வழங்கி, பணிகள் முடிக்கப்பட்டு மேற்கண்ட சாலைகள் பொதுமக்களின் பயன்பாட்டில் இருந்து வருகிறது என்பதை பேரூராட்சி இளநிலை உதவியாளர் மற்றும் வரிவசூலரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது. ரூ.101/– இலட்சம் மதிப்பீட்டில் 6 சாலைப்பணிகளையும் மற்றும் ரூ.64/– இலட்சம் மதிப்பீட்டில் 5 சாலைப்பணிகளையும் மேற்கொள்ள தனித்தனியாக இரண்டு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் வெளியிடப்பட்ட நிலையில் ஒவ்வொரு பணிக்கும் இரண்டே ஒப்பந்ததாரர்கள் மட்டுமே கலந்து கொண்டு ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்துள்ளதன் மூலம் மனுதாரர் புகார் தெரிவிப்பது போல் பேரூராட்சியில் பதிவு செய்துள்ள அனைத்து ஒப்பந்ததாரர்களுக்கும் முறையாக ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பேரூராட்சியால் அனுப்பப்பட்டுள்ளதா என்கிற ஐயம் எழுகிறது. இந்நிலையில் அருமனை முதல்நிலை பேரூராட்சியில் மேற்கொண்ட 11 பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளை முறையாக கையாளப்பட்டுள்ளனவா என்பதை உறுதி செய்திடும் வகையில் உள்ளாட்சி நிதி சிறப்பு தணிக்கைக் குழு மூலம் தணிக்கை செய்து, அறிக்கையினை 3 மாதக் காலத்திற்குள் பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கை இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் சாலைப்பணிகள் மேற்கொண்டதில் ஏதேனும் முறைகேடுகள் மற்றும் பேரூராட்சிக்கு நிதியிழப்போ நடைபெற்றுள்ளதாக தணிக்கை அறிக்கை மூலம் கண்டறியப்பட்டால், சம்பந்தப்பட்ட அருமனை பேரூராட்சி அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

The DTP is directed to issue suitable instructions to all Assitant Directors and Executive Officers to adhere to the standard protocol of sending communications to the registered contractors by sending by objective transmissions like speed post or RPAD. The Arunmanai Executive Officer did not even think of sending the communications by e-mail which is a scientific, price-free and common channel of correspondence. This failure shows the Town Panchayat in bad light besides raising reasonable suspicion in the minds of the Common man. Moreover when the value of the works put together is more then one Crore, the Town Panchayat's omission in

sending letters to the contractors by speed post or RPAD whichever is less is viewed seriously with favouritism, nepotisim and cronyism steeped in corrupt practices in the minds of the delinquent officials. Hence disciplinary action to be taken against the Executive Officers who held the post during 2020-21.

The DTP may pursue appropriate action based on the direction of the Forum.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 13–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.C.P.சுஜி,
16/165A, பள்ளிவிளை, அருமனை,
பனங்கரை, கன்னியாகுமரி மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
அருமனை முதல்நிலை பேரூராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

4) இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை – 28. (பெயரிடப்பட்ட உரையில்)

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

உதவிப்பதிவாளர்.

17/04/23

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவர்
சென்னை–600 032